


சென்னை தெற்கு மாவட்டம் – சைதை மேற்கு பகுதி – 142வது ”அ வட்டத்தில் மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சைதாப்பேட்டை குயவர் வீதியில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி 142வது ”அ வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், மாவட்ட பிரதிநிதி கிண்டி ஆர்.எல்.செல்வம், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தீ.ராஜ்குமார், ஆகியோர் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 1000 பேருக்கு அரிசி, போர்வை ஆகியவற்றை வழங்கினார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதி பொன்.ஜெய்சிங், பகுதி அமைப்பாளர் ஆர்.எஸ்.ரமேஷ், மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்ட்டிஸ்ட்குமார், வட்ட கழக நிர்வாகிகள் சேக்தாவூத், இரா.சுதாகர், டி.எழிலரசன், ஆர்.மகேஷ், எம்.சுந்தரம் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பேரூராட்சியில், நேற்று (25.12.2023), குரும்பல் என்னும் இடத்தில், மழைநீர்வெள்ளதால் உடைந்த போன பாலத்தையும், சேதமடைந்துள்ள குடிசை வீடுகளையும், இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் .உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .எ.வ.வேலு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மீன்வளம்மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அமைச்சர் .அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், வணிகவரி பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி மற்றும் மாவட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

### கொரோனா - இஸ்ரேல் போர் நடப்பதால் செல்ல முடியாத நிலை! கிறிஸ்தவர்கள்

# ஜெருசலேம் செல்ல அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேடிக்கையானது!

## எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதில்!



செஞ்சி, டிச. 26 -

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் மக்களை சிரமப்படுத்துவதற்காக இந்த காலகட்டத்தில் போர் நடக்கின்ற நேரத்தில் ஜெருசலம் செல்ல திராவிட முன்னேற்ற கழக அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது வேடிக்கையான விஷயம் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்து பின்னர் அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது செய்தியாளர்களிடம் கூறுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சிறுபான்மை நலத்துக்காக ஒரு துறையை உருவாக்கி சிறுபான்மை மக்களுடைய நலன் காப்பதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து இன்றைக்கு அது செயல்படுத்தி கொண்டு வருகிறது. அதில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் பராமரிப்பு செய்வதற்கு தலா 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

400 ஆண்டு காலம் பாரம்பரியமாக உள்ள தர்காக்கள் தேவாலயங்களுக்கு சிறப்பு நிதியாக பத்து கோடி ரூபாய் வழங்கி அதிலும் தலா 2 கோடி ரூபாய் ஒரு ஒரு தேவாலயங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் உள்ள சென்னையில் அரசு சார்ந்த நிகழ்வில் சென்னை தாமஸ் மவுண்ட் அந்த தேவாலயத்திற்காக ரூபாய் 1 கோடியே 18 லட்சம் ரூபாயிலும், திருநெல்வேலி தேவாலயத்திற்காக ரூபாய் 1 கோடியே 3 லட்சம் லட்ச ரூபாயும், சென்ட் சேவியர் நாகர்கோவில் தேவாலயத்திற்காக சென்ட் தாமஸ் மவுண்ட் நேஷனல் தேவாலயத்திற்கு 1 கோடியே 49 லட்சம் இதேபோல தொடர்ந்து அந்த தேவாலயங்கள் பராமரிப்பதற்காக ரூபாய் 10 கோடி ரூபாயில் தொடர்ந்து வழங்கி கொண்டு வருகிறோம்.

அதேபோல புனித பயணமாக கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் செல்வதற்காக ஒரு ஆண்டுக்கு 600 நபர்கள் செல்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து 2 கோடியே 35 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் அது அவர்கள் பயணம் செல்ல முடியவில்லை, இப்போது இஸ்ரேல் போர் நடந்த நிலையில் அவர்கள் செல்ல முடியாத நிலை இருந்தது.

எனவே ஜெருசேலம் செல்லுகின்ற அவர்களுக்கு உதவியாக அரசு சார்பாக ஆண்களுக்கு ஒரு நபருக்கு 37 ரூபாய் விதமும் அதே போன்று பெண்களுக்கு 10 சதவீதம் 600 பேரில் 600 கன்னியாஸ்திரிகளுக்கு தல 1 நபருக்கு 60 ஆயிரம் ரூபாயும் திட்டம் திட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கிறிஸ்துவ மக்கள் புனித ஜெருசலேம் பயணத்தை மேற்கொள்ளும் நேரத்தில் அரசு கவனத்திற்கு எடுத்துச் சென்று பதிவு செய்து அந்த யாத்திரை முடித்து வந்த பிறகு மீண்டும் அந்த விபரத்தை கொடுக்கின்ற நேரத்தில் அவருக்கு அந்த நிதியை ஒதுக்குவதற்கான நம்முடைய துறை சார்பாக தயார் நிலையில் உள்ளது என்பது இந்த கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் இதை இணைத்து சொல்ல கடமைப்பட்டிருக்கிறன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் மக்களை சிரமப்படுத்துவதற்காக இந்த காலகட்டத்தில் போர் நடக்கின்ற நேரத்தில் அங்கு ஜெருசலம் செல்ல திராவிட முன்னேற்ற கழக அரசு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுவது அது வேடிக்கையான விஷயம்... திடீரென்று இந்த பாசம் எப்படி வந்தது என்று உங்களுக்கே தெரியும். அவர் பா.ஜ.க.வில் இருந்து தன்னுடைய கட்சி கூட்டணி விலகி விட்டதாக சொல்கின்ற ஒரு செய்திக்கு ஒரு செய்தி சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்காக இந்த செய்தியை பரப்பி வருகிறார் என்பது அனைத்து மக்களுக்கும் தெரியும்.

எனவே ஜெருசலம் செல்கின்ற அந்த யாத்திரைகளுக்கு தமிழக அரசு சார்பாக நிதியினை ஒதுக்கீடு செய்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் செல்லுகின்ற அரசாங்கத்திற்கு பதிவு செய்து சென்று திரும்பி வந்தவுடன் அந்த யாத்திரை முடிந்து விட்டது பயணம் செய்து வந்திருக்கிறோம் என முழு தகவல் கொடுத்தவுடன் அந்த உரிமை தொகையை விடுவிக்கப்படும் என்பதுதான் தமிழகத்தின் சார்பாக உள்ள அதிகாரப்பூர்வ செய்தி, எனவே இதை அவர் தெரிந்தும் அறிந்தும் இதை மூடி மறைத்து ஒரு செய்தியாக்க வேண்டும் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளை பெறுவதற்காக திசை மாற்றி ஒரு செய்தியை சொல்லுகிறார். என்றைக்கும் சிறுபான்மை மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பது அவருக்கே தெரியும் அவருடைய பேச்சு ஒரு நாடகம் என்பது அனைவரும் சொல்லுகின்றனர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

---

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

# அண்ணாவின் முதுமொழியை நிறைவேற்றுகிறார்!

## ‘தினத்தந்தி’ நாளேடு புகழாரம்!

சென்னை, டிச. 26 -

‘மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடமிருந்து கற்றுக் கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய்’ என்கிற அறிஞர் அண்ணாவின் முதுமொழியை அவரது வழித் தோன்றலாய் நிறைவேற்றிக் காட்டிவிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தனது தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

உங்களைத் தேடி உங்கள் ஊருக்கு வருகிறார் கலெக்டர்! என்ற தலைப்பில் நேற்று ‘தினத்தந்தி’யில் வெளியான தலையங்கம் வருமாறு:-

மக்கள் தங்கள் குறைகளுக்கு தீர்வுகாண கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்திக்க, கால்கடுக்க நின்று மனு கொடுத்த காலம் எல்லாம் போய் விட்டது. இப்போது மக்களை அதிகாரிகளே தேடிவரும் காலம் வந்துவிட்டது. இந்தக் கொள்கையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே தொடங்கிவிட்டார். தேர்தல் பிரசாரத்திற்கு ஒவ்வொரு ஊருக்கும் அவர் சென்றபோது, உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” என்று எழுதப்


தலையங்கம்
தினத்தந்தி
25.12.2023
உங்களைத் தேடி உங்கள் ஊருக்கு வருகிறார் கலெக்டர்!

பட்ட ஒரு பெட்டியை மேடையில் வைத்திருந்தார். அந்தத் தொகுதி மக்கள், தங்கள் குறைகளை மனுவாக எழுதி அதில் போடலாம். அந்தப் பெட்டியை பூட்டி அதன் சாவியைத் தானே வைத்துக்கொள்வேன். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தவுடன் அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதே முதல் வேலை என்றார். அதேபோல, முதல்அமைச்சர் பொறுப்பை யேற்றவுடன், இதற்காக ஷில்பா பிரபாகர் சதிஷ் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வைத்தார்.

இந்தப் பணிகள் முடிந்த வுடன், முதல்வரின் முகவரி” என்ற தனிப் பிரிவை உருவாக்கி, பொதுமக்கள் தங்கள் குறைகளை நேரிலும், கடிதம், மின்னஞ்சல், வாட்ஸ்அப், போன் மூலமாக தெரிவிக்க ஏற்பாடு செய்தார். சில நேரம் அவரே அந்த அலுவலகத்துக்கு வந்து பொதுமக்களுடனும், அதன்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளுடனும் பேசிவருகிறார்.

மாத்திரை மருந்துகளை மருத்துவமனைக்கு சென்று வரிசையில் காத்திருந்து நோயாளிகள் வாங்கிய நிலையில், இப்போது அவர்களின் வீடு தேடிச் சென்று வழங்க வகை செய்யும் மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தை தொடங்கி வைத்தார். மாணவர்களுக்கு பள்ளி நேரம் போக, மாலை நேரத்தில் டியூஷன் சொல்லிக் கொடுக்கும் “இல்லம் தேடி கல்வி” திட்டத்தை நிறைவேற்றினார். இது மட்டுமல்லாமல். கள ஆய்வில் முதல்அமைச்சர்” திட்டத்தின் கீழ், அவரே மாவட்டந்தோறும் சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை மட்டுமல்லாமல். பணிகளை நேரில் பார்வையிடச் சென்று மக்களையும் சந்திக்கிறார்.

இப்போது ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாவட்ட கலெக்டர்களிடம் மக்கள் தங்கள் குறைகளை தீர்க்க மனு அளித்து வருகிறார்கள். இனி கலெக்டரே மக்களிடம் சென்று, அவர்களோடு தங்கி, அவர்கள் குறைகளைக் கேட்கும் வகையில், “உங்களைத் தேடி. உங்கள் ஊரில்” என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இதன்படி, ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும். மாதத்தில் ஒரு நாள், ஒரு தாலுகாவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்வார்.

கலெக்டரே ஓர் ஊரில் தங்கி மக்களை சந்தித்து குறைகளைக் கேட்கும்போது, நிச்சயமாக அவருக்கு கீழ் பணியாற்றும் அதிகாரிகளும் உடன் செல்வார்கள் என்பதால், மக்களின் குறைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்க இந்தத் திட்டம் வழிவகுக்கும். பொதுமக்கள். குறிப்பாக பெண்கள், வயது முதிர்ந்தோர் தங்கள் கோரிக்கைக்காக கலெக்டர் அலுவலகத்துக்கு தேடிச்செல்லும் நிலைமைக்குப் பதிலாக. கலெக்டரே அவர்களை நாடி வரும் இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம். “மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய்” என்ற முதுமொழியை அறிஞர் அண்ணா அடிக்கடி சுட்டிக் காட்டுவது உண்டு. அதை இன்று அவரது வழித்தோன்றலாய் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றிக் காட்டிவிட்டார்.

இவ்வாறு தினத்தந்தி நாளேடு தலையங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் திருவூர் ஊராட்சி ராம் நகரில் 12.30 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை திறப்பு விழா நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். அருகில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதியாளர் சண்முகவள்ளி, ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய கழக செயலாளர் செ.பிரேம் ஆனந்த், ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பர்க்கத்துல்லாகான், மாவட்ட கவுன்சிலர் இந்திரா குணசேகரன், ஒன்றிய கவுன்சிலர் ஆர்.திலீப்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் மாணிக்கம், மண்டல துணை வட்டாட்சியர் லதா, கிராம நிர்வாக அலுவலர் சூர்யா கழக நிர்வாகிகள் சுபாஷ் சந்திரபோஸ், அன்புநாதன், தாமரைச்செல்வன், தனஞ்செழியன், சசிகுமார், மகேஷ் ரோமரியோ, விஜயக்குமார் , செல்வராஜ், ரூபி, உள்பட பலர் கலந்து கொண்டனர்

---

### செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ. 400 கோடியில் அமைக்கப்பட்ட

# “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” திறப்புக்கான முன்னேற்பாடுப் பணிகள்!

## அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு!

செங்கல்பட்டு,டிச.26-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (25.12.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தனர்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் சுமார் 400 கோடியில் அமைந்திருக்கின்ற “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையமானது” அனைத்து பணிகளும் நடைபெற்று. வெகுவிரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. இந்த பேருந்து நிலையம் வெகு விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு அமையவேண்டும் என்பதற்காக தொடர் முயற்சியாக நம்முடைய மாவட்ட அமைச்சர் தா. மோ. அன்பரசன் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துக்கு அளவிட முடியாத ஒத்துழைப்பை நல்கி இருப்பதற்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன் அவர்களும் ஆய்வுக்கு வரும்போதெல்லாம் உடனிருந்து எங்களுக்கு ஊக்கத்தை அளித்து இருக்கிறார்கள். துறையினுடைய செயலாளர் சமயமூர்த்தி அவர்களும். உறுப்பினர் செயலாளர் அன்ஷுல் மிஸ்ரா அவர்களும், இந்த மாவட்டத்தினுடைய ஆட்சியாளர் ராகுல் நாத் அவர்களும்தொடர்ந்து இந்த பேருந்து முனையம் நிறைவாக மக்கள் அர்ப்பணிப்புக்கு கொண்டு செல்வதற்கு எல்லா வகையிலையும் உதவியாக இருந்ததை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

இந்த பேருந்து நிலையமானது 86 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துகின்ற முயற்சி முழுமை பெற்றிருக்கிறது. 2 3 மாதங்களுக்கு முன்பே இந்த பேருந்து நிலையம் திறக்கின்ற சூழல் இருந்தும் தள்ளிப்போனதற்கான காரணம் மழை காலங்களில் பெருமளவு தண்ணீர் தேங்கி இருப்பதை கண்டறிந்து. 1700 மீட்டர் அளவுக்கு மழைநீர் வடிகால் அமைப்பு பணி நடந்தது. அந்த பணி தற்போது நிறைவு பெற்றிருக்கிறது. கடந்த ஒன்றரை மாதங்களாக விட்டு விட்டு பெய்த மழையினால் தொடர்ந்து அந்த பணிகளை விரைவாக முடிக்க முடியாத ஒரு சூழல் இருந்தாலும் இரவு பகல் பாராமல் அந்த 1200 மீட்டருக்கு மூன்று பிரிவாக பிரித்து பணிகளை மேற்கொண்டதன் விளைவாக சுமார் இரண்டரை மாத காலங்களிலேயே அந்த பணியும் நிறைவுக்கு வந்தது.

இந்த பேருந்து நிலையம் முழுமையாக பயன்பாட்டிற்கு வருகின்றபோது 2,310 பேருந்துகள் தினந்தோறும் இங்கிருந்து இயக்கத்தில் இருக்கும். அதில் 40 பேருந்துகள் ஆம்னி பேருந்துகள் உள்ளடக்கும். கிட்டத்தட்ட 1,00,000 மக்கள் தினந்தோறும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் மக்களுடைய பயன்பாடு இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அப்படி வருகின்ற மக்களுக்கு தேவையான உணவு வசதி, இப்போது திடீரென்று உடல் நலக்குறைவு ஏற்பட்டால் அவர்களுக்குண்டான மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கு பார்மசி. வருகின்ற ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஓய்வெடுப்பதற்கு ஓய்வறைகள், அதே போல் உணவகங்கள், தீ தடுப்புக்காக முழுமையாக தயார் செய்யப்பட்டு, தயார் நிலையில் தீயணைப் புத்துறை வாகனங்கள். அதேபோல் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி, தேவையான பெட்ரோல், டீசல் போடுவதற்கு உண்டான டீசல் பங்க் அமைப்பது, புறக்காவல் நிலையம் செயல்படுவதற்கான பணிகளும் நடைபெற இருக்கின்றன. ஆகவே எல்லா வகைகளையும் மக்களுடைய பயன்பாட்டிற்கு உகந்த பேருந்து நிலையமாக அனைத்து கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் பணிகள் முழுமையாக முடிவடைந்து 1200 மீட்டரும் முழுமை அடைந்திருக்கிறது. மேலும் ரயில்வே நிலையத்திற்கு இடையே அந்த ஏற்கனவே இருக்கின்ற அந்த மழைநீர் தாழ்வான அகற்றி விட்டு புதிதாக மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டும் என்பது மாவட்ட அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும். கவனத்துக்குக் கொண்டு வந்து, அதையும் ஆய்வு செய்து அதற்குண்டான தொகைக்கு அதற்குண்டான எஸ்டிமேட் ரயில்வே துறையிடம் கூறப்பட்டிருக்கின்றது. அதே போல் ரயில் நிலையம், ஸ்கை வாக் போன்ற பணிகளுக்கும் திட்டமிட்டு இருக்கிறோம்.

பேருந்து நிலையம் திறந்தோம், முடித்தோம் என்றில்லாமல் தொடர்ந்து இந்த பேருந்து நிலையத்திற்கு வருகின்ற மக்களுக்கு தேவையான எதிர்காலத்தில் தேவைப்படுகின்ற அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் தொடர் நடவடிக்கையாக ஏற்படுத்தி இருக்கிறோம். இவ்வளவு பணிச்சுமை வந்ததற்கு காரணம். இந்த பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்ட போது கடந்த ஆட்சி காலத்தில் திட்டமிடல் இல்லாததால்தான். புதிதாக பொறுப்பேற்ற அரசு அனைத்து வகையிலேயும் இதற்கு தேவையான கட்டமைப்புகளை புதிதாக உருவாக்குவது. அதேபோல இடையில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றம், பெருவெள்ளம், நோய்தொற்று போன்ற இந்த சூழ்நிலைகளால் காலதாமதம் ஏற்பட்டது தற்போது இதை அனைத்தையும் சவாலாக எடுத்துக்கொண்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வருகின்ற தமிழ் புத்தாண்டில் மக்கள் மகிழ்ச்சியோடு இந்த பேருந்து நிலையத்திலிருந்து பயணிக்கும் வகையில் திறப்புவிழா அமையும், அதாவது தமிழ் புத்தாண்டில் இந்த பேருந்து நிலையத்தை மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துவார்கள். இந்த பேருந்து நிலையமானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், காட்டாங்குளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.உதயா கருணாகரன், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் என். சீனிவாச ராவ், கோயம்பேடு அங்காடி முதன்மை நிர்வாக அலுவலர்/டி. ஆர்.ஓ., திருமதி.மு.இந்துமதி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழிகுடி ஊராட்சியில் நேற்று முன்தினம் (24.12.2023) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அரிசி, பருப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். மக்களைச் சந்தித்து அடிப்படைத் தேவைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளை அனைத்தும் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.